TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097145

1. District : நாமக்கல் PS: ஊ.த.க.பிரி Year: 2018 FIR No.: 7/AC/2018 Date: 5.5.2018
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் : -
Date to : நாள் வரை : 1) சுமார் 20 நாட்களுக்கு முன்பு காலை சுமார் 9.00 மணி.
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் :
Time to : நேரம் வரை : 2) 3.5.2018 ம் தேதி காலை சுமார் 9.00 மணி. 3) 5.5.2018 ம் தேதி காலை சுமார் 9.15 மணி.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 4.5.2018 Time : நேரம் 15.00 மணி.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 4.5.2018 Vol. II. Time : நேரம் 15.00 மணி.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக வாய் மொழியாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 40 கி.மீ. வடக்கில்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி TANGEDCO அலுவலகம், நாமகிரிப்பேட்டை, நாமக்கல் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P S District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.சக்திவேல்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M.கருணாநிதி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 28
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
Date of Issue : வழங்கப்பட்ட நாள் -
Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
(f) Occupation : தொழில் எலக்ட்ரீசியன்
(g) Address : முகவரி SMT நகர், ஆத்தூர் மெயின் ரோடு, நாமகிரிப்பேட்டை, ராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ராஜவேலு, உதவி பொறியாளர், TANGEDCO, நாமகிரிப்பேட்டை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

முன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / ~~பணிக்கப்படுதல்~~ பி. நல்லம்மாள் பதவி காவல் ஆய்வாளர். நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு ப. சக்திவேல்

Signature of the Officer in-charge, Police Station [signature] 15/5/2018.
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 5.5.2018.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
5.5.2018 at 17.00 hrs.

Name: பெயர் பி. நல்லம்மாள்,
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
2ம் கு.க. பிரிவு,
நாமக்கல்.

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/AC/2018 ஊழல் தடுப்பு சட்டம்-1988 பிரிவு 7-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

04.05.2018-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 15.00 மணிக்கு நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தாலுக்கா, நாமகிரிபேட்டை அஞ்சல், ஆத்தூர் மெயின்ரோடு, SMT நகரைச் சேர்ந்த (லேட்) M.கருணாநிதி மகன் K.சக்திவேல் (வயது-28/2018) என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி, காவல் ஆய்வாளர் அவர்களிடம் வாய்மொழியாக சொன்ன புகார் வாக்குமூலம் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிரிண்ட் எடுக்கப்பட்டு, புகார்தாரரால் படித்து பார்க்கப்பட்ட புகார் வாக்குமூலத்தின் விபரம் பின்வருமாறு:

நான் நாமகிரிபேட்டை SMT நகரில் எனது அம்மா சாந்தியுடன் வசித்து வருகிறேன். நான் 9-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் படிக்க தெரியும் ஆனால் அவ்வளவாக எழுத வராது. நான் நாமகிரிபேட்டையில் அங்காளம்மன் பேட்டரி ஒர்க்ஸ் என்ற பெயரில் பட்டறை வைத்து எலக்ட்ரீசியன் தொழில் செய்து வருகிறேன். எனது அம்மா பெயரில் SMT நகரில் சர்வே எண். 85/3A1 என்ற இடத்தில் மனை நிலம் உள்ளது. அதில் அரசு ஒதுக்கீட்டில் வீடு கட்டிக் கொண்டிருக்கிறோம். புதியதாக கட்டிக்கொண்டிருக்கும் வீட்டின் மேலே சிங்கிள் பீஸ் EB லைன் செல்லுகிறது. அதனால் அந்த EB லைன் கம்பத்தை சுமார் 10 அடி நகர்த்திப் போட வேண்டிய நிலை உள்ளது. அதனால் கடந்த 19.03.2018-ஆம் தேதி நான் நாமகிரிப்பேட்டை EB அலுவலகம் சென்று JE அவர்களிடம் விபரம் கேட்டேன். அவர் சொல்லியபடி அன்றையதினமே ஒரு மனு எழுதி அதனுடன் 20 ரூபாய் பத்திரம் வாங்கி DCW அண்டர்டேக்கிங் டைப் செய்து கொண்டுபோய்கொடுத்தேன். அடுத்த நாள் அவர் எங்க இடத்திற்கு வந்து EB லைனை அளந்து பார்த்துவிட்டு அருகில் உள்ள வீட்டு ஓனர் மணி என்பவரிடம் கம்பத்தை மாற்றிப் போடுவது பற்றி பேசிவிட்டு, பக்கத்து நிலத்துக்காரர் கம்பத்தை மாற்றக்கூடாது என்று அப்ஜக்சன் தெரிவிச்சிருக்காங்க என்றும் நீ பேசி சம்மதம் பெற்றுக்கொள் என்று சொல்லிவிட்டு சென்றார். ஆனால் அதன்பின் ஒரு வாரம் கழித்து எங்கள் பகுதி லைன் மேன் ஜான் பாட்சா எனது பட்டறைக்கு வந்து, எனது அம்மாவின் மனுவை என்னிடம்

திரும்பக் கொடுத்துவிட்டு மார்ச் மாதம் இறுதி என்பதால் கணக்கு முடிக்க வேண்டும் என்றும், JE மாறுதலில் செல்வதாலும் மனுவை திருப்பிக் கொடுக்க JE சொன்னதாக சொல்லிவிட்டு, புது JE வந்தவுடன் மனு கொடுக்கச் சொன்னார். அதன்பின் நான் பக்கத்து நிலத்துக்காரர் காளியப்பன் அவர்களிடமும் சென்று பேசி அவரும் கம்பத்தை மாற்றி போட்டுக் கொள்ள சம்மதம் சொன்னார். பின் சுமார் 20 நாட்களுக்கு முன் வழியில் லைன் மேன் ஜான் பாட்சாவை பார்த்த நான் புது JE எப்ப வருவார் என்று கேட்டேன். அவர் நாளை மறுநாள் வருகிறார் என்று சொன்னார். நான் ஏற்கனவே எனது அம்மா பெயரில் என்னிடம் திரும்ப கொடுத்திருந்த மனுவை எடுத்துகொண்டு புது JE-ஐ பார்க்கப் போனேன். அவர் அன்றைய தினம் ஜாய்ன் பண்ணிவிட்டு வெளியில் சென்றுவிட்டதாக சொன்னார்கள். நான் அடுத்த நாள் EB ஆபீஸ் சென்று புது JE திரு.ராஜவேலு அவர்களிடம் அம்மனுவைக் கொடுத்தேன். அவர் அதை வாங்கிக் கொண்டு அடுத்த நாள் எங்க இடத்தை பார்வையிட்டு பக்கத்து வீட்டுக்காரர் மற்றும் பிளாட் உள்ளவர்களிடம் விசாரித்துவிட்டு அளந்து கொண்டு சென்றார். அதற்கு மறு நாள் நான் EB அலுவலகம் சென்று JE அவர்களை நேரில் சந்தித்தபோது எவ்வளவு வரும் என்று கணக்கு போடவில்லை, நான் போட்டுவிட்டு சொல்கிறேன் என்று சொன்னார். அதன்பின் மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து காலை சுமார் 9 மணியளவில் JE திரு.ராஜவேலு அவர்களை EB அலுவலகத்தில் சந்தித்து கேட்டபோது கவர்ன்மெண்ட் கணக்குப்படி 25,000 ரூபாய் வரும், அதோடு லேபர், JCB செலவும் வரும் என்றும் அப்பணத்தை கொடுத்தால் வேலையை முடித்துவிடலாம் என்றும் இது குறித்து வெளியில் யாரிடமும் சொல்லக்கூடாது என்றும், இதற்கு பில் எதுவும் வராது என்றும், பணம் கொடுப்பது வெளியில் தெரிந்துவிட்டால் வேலை நடக்காது, பெண்டிங் ஆகிவிடும் என்றும் சொன்னார். அவர் அவ்வாறு சொன்னதில் எனக்கு இவ்வளவு செலவாகுமா என்று சந்தேகமாக இருந்தது. நான் எலக்ட்ரீசியன் என்பதால் எனக்கு தெரிந்தவர்களிடம் சிங்கிள் பேஸ் EB லைனை இடம் மட்டும் மாற்றிப் போட எவ்வளவு செலவாகும் என்று விசாரித்ததில் அதிக பட்சம் 15,000 ரூபாய் வரை கவர்ன்மெண்டுக்கு கட்ட வேண்டி வரும் என்று சொன்னார்கள். ஆகையால் நேற்று 03.05.2018-ஆம் தேதி காலை சுமார் 9 மணிக்கு JE ராஜவேலு அவர்களை அவரது ஆபீசில் பார்த்து கேட்ட போது, அவர் கவர்ன்மெண்ட் கணக்குப்படி பார்த்தால் நீ

இதைவிட அதிகமாக கட்ட வேண்டி வரும், அதனால் நீ ரூபாய் 25,000 மட்டும் கொடுத்துவிடு, அதிலேயே லேபர், JCB செலவையும் பார்த்துக்கலாம், கணக்கில் கட்டாமலேயே வேலையை முடித்துக் கொள்ளலாம் என்று சொன்னார். மேலும் திங்கள்கிழமைக்குள் 25,000 ரூபாயை ரெடி பண்ணிட்டு வந்திடு, இல்லைன்னா உன் பெட்டிசனை திரும்ப வாங்கிச்சென்று விட்டு, என்னைக்கு உன்னால் பணம் தயார் செய்ய முடியுதோ அன்றைக்கு பணத்தையும், பெட்டிசனையும் கொண்டுவா என்று சொல்லி அனுப்பினார். எனக்கு JE ராஜவேலு அவர்கள் EB லைனை மாற்றி அமைப்பதற்கு கவர்ன்மெண்ட் கணக்கில் பணம் செலுத்தாமல் அவரே ஆதாயம் அடைவதற்காக என்னிடம் பணம் ரூ.25,000/-ஐ லஞ்சமாக கேட்டு வாங்கிக்கொள்ள ஒத்துக்கொண்டுள்ளார். அதனால் JE ராஜவேலு அவர்கள் கவர்மென்ட கணக்கில் கட்டவேண்டிய பணத்தை கட்டாமலேயே அவர் கேட்ட ரூ.25,000/-ஐ கொடுத்து எனது வேலையை முடித்துக் கொள்ள எனக்கு விருப்பம் இல்லாததால், நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் வந்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு புகார் சொன்னேன். JE ராஜவேலு அவர்களை அவர் கேட்ட பணம் ரூ.25,000/- உடன் நேரில் சந்திக்க உள்ளேன். அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். படித்துப் பார்த்தேன், நான் சொன்னபடி உள்ளது. (கையொப்பம்) K.சக்திவேல், 04.05.2018.

மேற்கண்ட புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், குற்ற அலுவலர் கையூட்டு கேட்பதை உறுதி செய்யும் பொருட்டும் ஒரு முன்விசாரணைக்கு உத்திரவிடக்கோரி, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திற்கு, மின்னஞ்சல் மூலம் புகார் வாக்குமூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண்.PE.129/2018/TANGEDCO/NK, நாள்.04.05.2018-ல் கண்ட உத்திரவுபடி, 04.05.2018-ம் தேதி மாலை 17.30 மணிக்கு குற்ற அலுவலர் திரு.ராஜவேலு, இளநிலை பொறியாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம், நாமகிரிப்பேட்டை,

நாமக்கல் என்பவர் மீது ஒரு முன்விசாரணை பதிவு செய்யப்பட்டது. அந்த முன்விசாரணையின் போது, புகாரில் கூறப்பட்ட குற்ற அலுவலர் இளநிலை பொறியாளர் அல்ல என்றும், அவர் உதவி பொறியாளர் பதவியில் உள்ளார் என்றும் தெரிய வந்தது. மேலும் இன்று 05.05.2018-ம் தேதி காலை சுமார் 9.15 மணிக்கு புகார்தாரர் திரு.சக்திவேல் குற்ற அலுவலர் திரு.ராஜவேலு, உதவிப் பொறியாளர் அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்தபோது குற்ற அலுவலர் புகார்தாரரிடம் ரூ.20,000/- கையூட்டாக கேட்டு பெற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார். குற்ற அலுவலர் புகார்தாரரிடம் ரூ.20,000/- கையூட்டாக கொடுத்தால்தான் புகார்தாரரின் வீட்டின்மேல் செல்லும் ஒருமுனை மின் தடத்தை நகர்த்திபோட ஏற்பாடு செய்வேன் என்று கூறியது உறுதி செய்யப்பட்டது.

ஆகவே, எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதாக முன்விசாரணையில் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 05.05.2018-ம் தேதி மாலை 16.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.7/AC/2018 ஊழல் தடுப்பு சட்டம்-1988 பிரிவு 7-ன்படி எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

5/5/2018

(M. நல்லம்மாள்)
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.